# தமிழ் இலக்கியங்களில்
## அறமும் அருளும்

தொகுதி 2















பதிப்பாசிரியர்கள்
முனைவர் ஆ. மகாலட்சுமி
திருமதி சுகந்தி நாடார்
முனைவர் இலட்சுமி கார்மேகம்

தமிழ்த்துறை (அரசு உதவி), என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி)
பாலக்காடு ரோடு, பொள்ளாச்சி – 642 001

"அச்சமும் அவலமும் ஆர்வமும் நீக்கி
செற்றமும் உவகையும் செய்யாது காத்து,
ஞெமன் கோல் அன்ன செம்மைத்து ஆகி,
சிறந்த கொள்கை அறம் கூறு அவையமும்"
(மதுரைக்காஞ்சி: 489-492)

"அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை" (திருக்குறள் -76)




என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி)
தேசிய மீள்தர மதிப்பீட்டு "ஏ" தகுதி
ஐ.எஸ்.ஓ. தரச்சான்றிதழ் 9001 – 2015
90, பாலக்காடு ரோடு, பொள்ளாச்சி – 642 001.

9789387009523

₹ 400/-

பிரபாக் பிரிண்ட் 0422 2646036

# தமிழ் இலக்கியங்களில் அறமும் அருளும்

## (பன்னாட்டுக் கருத்தரங்கம்)


| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர்கள் | : | **முனைவர் ஆ. மகாலட்சுமி**<br>**திருமதி சுகந்தி நாடார்**<br>**முனைவர் இலட்சுமி கார்மேகம்** |
| பதிப்புரிமை | : | பதிப்பாசிரியர்கள் |
| முதற்பதிப்பு | : | ஜனவரி, 2019 |
| வெளியீடு | : | **தமிழ்த்துறை (அரசு உதவி)**<br>**என்.ஜி.எம் கல்லூரி**<br>பொள்ளாச்சி - 642 001. |
| கணினி | : | பிரடாக் பிரிண்ட், கோயம்புத்தூர் - 29. |
| அச்சாக்கம் | : | பிரடாக் பிரிண்ட்<br>476 பூமாதேவி கோவில் அருகில்<br>கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)<br>கோயம்புத்தூர் - 29.<br>அலைபேசி : 98432 73994, 91505 91017 |
| பக்கங்கள் | : | **XVIII + 348 - 366** |
| விலை | : | உரூ. 400/- |

**ISBN : 978 - 93 - 87009- 52 - 3**


# Ethics and Devotion in Tamil Literature
## (International Conference)


| | | |
|---|---|---|
| Editors | : | **Dr. A. Mahalakshmi**<br>**Miss. Suganthi Nadar**<br>**Dr. Lakshmi Karmegam** |
| Copyrights | : | Editors |
| First Edition | : | January, 2019 |
| Published by | : | **Department of Tamil**<br>**N.G.M. College**<br>Pollachi - 642 001. |
| Computer | : | **Prdag Print**, Coimbatore - 29. |
| Printing at | : | **Prdag Print**<br>476, Near Boomadevi Kovil<br>G.N. Mills (Po), Coimbatore - 29.<br>Cell : 98432 73994, 91505 91017 |
| Pages | : | **XVIII + 348 - 366** |
| Prize | : | **Rs. 400/-** |

149

# புறநானூற்றில் புலவர் அறமும் அருளும்

**ம. காயத்ரி**
*முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை*
*நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி*
*பொள்ளாச்சி - 642001.*

சங்ககாலப் புலவர்கள் உயரிய மக்கட்பண்புகள் நிறைந்த ஒழுக்க வாழ்வினர். பரந்த மனப்பான்மையும், தன்மானமும் கொண்டவர்கள். தொண்டுள்ளம் சான்றவர்கள். செய்ந்நன்றி, நட்பு ஆகிய பண்புகளைக் கொண்டவர்கள். அஞ்சாமை கொண்டு அறமுரைக்கும் துணிவுடையவர்கள். அரசர்களைப் பாடிப்பரிசில் வேண்டுவதைத் தொழிலாகக் கொண்டாலும் அவர்கள் செய்யும் தவறுகளை அஞ்சாமல் கண்டித்து அறநெறியிலேயே அவர்களை வழிபடுத்துகின்ற இயல்புடையவராகவும் புலவர்கள் இருந்தனர்.

"நாடாளும் தலைவர்கள் இலக்கியம் இயற்றும் புலவர்களையே விழுமியராகப் போற்றி வந்தனர். அரசனை "அவன்" என்றும், புலவரை "அவர்" என்றும் சுட்டியது நாகரிக மதிப்பாகும். அரசியலில் தலையிட்டு அறிவுரை கூறியும் அறவுரைகளை நல்கியும் அரசரின் போக்கைத் திருத்தும் உரிமை புலவர்க்கு இருந்தது. அரசர் குறுநில மன்னர் ஆகியோரின் குடும்ப வாழ்விலும் புலவர் தலையிட்டு ஆவன செய்யும் ஆர்வத்தினைக் கொண்டிருந்தனர்." (சங்க இலக்கியத்தில் வேந்தர்கள், ப.59) என்று மு.வ. கூறுவதாக அரங்க.இராமலிங்கம் குறிப்பிடுகிறார்.

## புலவர்களின் பண்புகள்

மன்னர்களின் பரிசில்களை நம்பியே புலவர்கள் வாழ்ந்தனர். மன்னர்களும் அவர்களின் தகுதிக்கேற்ப பரிசிலும் வழங்கினர். கொடையாளர்களின் செவியாகிய நிலத்தில் பாடலாகிய விதையை விதைத்துத் தாம் விரும்பும் பரிசிலை விளைவித்துக் கொள்ளும் வலிய உள்ளமும் தகுதியறிந்து போற்றுதலையும் உடையது பரிசில் பெறுவார் வாழ்வு என்று பரிசில் வாழ்க்கையை,

***"வள்ளியோர் செவிமுதல் வயங்குமொழி வித்தித்தாம்***
***உள்ளியது முடிக்கும் உரனுடை உள்ளத்து***
***வரிசைக்கு வருந்தும் இப் பரிசில் வாழ்க்கை"***
***(புறம். 206: 2-4)***

என்ற அடிகள் எடுத்துரைக்கின்றன. இத்தகைய பரிசில் வாழ்க்கையைப் புலவர்கள் மேற்கொண்டாலும் தாம் பெற்றப் பரிசில்களைத் தமக்கு வேண்டும் என்று சேர்த்து வைத்துக் கொள்ளும் இயல்பு அவர்களிடம் இல்லை. பறவைகள் போல் நெடு வழி சென்று இயன்ற அளவில்



பாடிப் பெற்றப் பொருள்களை மகிழ்ச்சியோடு தம் சுற்றத்தினருக்கும் வழங்கி அதைப் பாதுகாவாது பிறருக்குக் கொடுத்துத் தம் பெருமிதம் குறைவுபடாமல் வாழும் உயர்ந்த நெறியைப் புலவர்கள் பின்பற்றியுள்ளனர்.

புலவர்கள் வறுமையுற்றாலும், துன்புற்றாலும் அறிவுணர்ச்சி இல்லாதவருடைய செல்வம் பயன்படாது என்பதை உணர்ந்து அவர்களிடம் சென்று பொருள் வேண்டமாட்டார்கள். நல்ல அறிவுணர்ச்சி உடையவர்கள் வறுமையுற்றாலும் அவ்வறுமை ஆயினும் பயன்படும் என்று அதை மகிழ்வோடு நினைப்பது புலவர்களின் பண்பாகும். இதை,

***"மிகப்பேர் எவ்வம் உறினும் எனைத்தும்***
***உணர்ச்சி இல்லோர் உடைமை உள்ளேம்***
***நல்லறி வுடையோர் நல்குரவு***
***உள்ளுதும் பெருமையாம் உவந்து நனி பெரிதே"***
***(புறம். 197)***

என்ற அடிகள் எடுத்துரைக்கின்றன. இதன் மூலம் புலவர்கள் செல்வந்தர்களை நாடாமல் அறிவுணர்ச்சி உள்ளவர்களையே நாடியிருப்பதை அறியமுடிகிறது.

ஈ என இரத்தல் கடினமானது. கடினமான அச்செயலை வறுமை காரணமாகப் புலவர்கள் மேற்கொண்டாலும் அருளோடு வழங்கினால் மட்டுமே பரிசில் பெறுவார்கள். அருளோடு வழங்கும் பரிசிலை மட்டுமே பெறுவேன். இல்லாவிட்டால் பரிசில் பெறமாட்டேன் என்ற உயர்ந்த கொள்கை புலவர்களிடம் காணப்பட்டது. இதை,

***"உயர்ந்து ஏந்து மருப்பின் கொல்களிறு பெறினும்***
***தவிர்த்து விடு பரிசில் கொள்ளலென் உவந்துநீ***
***இன்புற விடுதி ஆயின் சிறிது***
***குன்றியும் கொள்வல்" (புறம்.159: 22-25)***

என்ற அடிகள் விளக்குகின்றன.

பரிசில் பெற்றுப் புலவர்கள் தங்கள் வாழ்க்கையை நடத்தினாலும் அதைத் தானே வைத்து இன்புற வேண்டும் என்று எண்ணாமல் அனைவருக்கும் கொடுத்து வாழ்ந்திருக்கின்றனர் என்பதையும், உயர்ந்த பரிசில்களாக இருப்பினும் மன்னர்கள் அருளோடு வழங்கினால் மட்டுமே ஏற்றுக்கொள்ளும் தன்மையுடன் வாழ்ந்ததையும் அறியமுடிகின்றன.

## வாழ்த்தும் நெறி

புலவர்கள் பரிசில் பெற்று விடைபெறும் போது புரவலர்களாகிய அரசர்கள் ஏழடிப் பின் சென்று நான்கு குதிரைகள் பூட்டிய தேரில் தார்க்குச்சியில் உள்ள ஆணியை நீக்கிவிட்டு தார்க்கம்பைக் கொடுத்து வழியனுப்புவர். இதை,

***"பால்புரை புரவி நால்குடன் பூட்டிக்***
***காலின் ஏழடிப் பின்சென்று கோலின்***

*தாறு களைந்து ஏறு என்று ஏற்றி' (பொரு. 165-167)*

என்ற அடிகளால் அறியலாம்.

அவ்வாறு இருந்த மன்னர்களின் மத்தியில் பரிசில் வழங்காத மன்னர்களும் இருந்துள்ளனர். அத்தகைய மன்னர்களைப் புலவர்கள் தூற்றவில்லை. மாறாக மன்னனும் அவன் மக்களும் நன்றாக வாழட்டும் என்றே வாழ்த்தினர். இத்தகைய உயர்ந்த அருள் உள்ளம் புலவர்களிடம் காணப்பட்டது. இதை,

*"நோய் இரலாக நின் புதல்வர்" (புறம். 196:10)*

என்கிறது. மதிப்போடு வேண்டப்படும் பரிசில் கிடைக்காத போதும்,

*"ஈயாய் ஆயினும் இரங்குவென் அல்லன்*
*நோய் இலை ஆகுமதி'*

என்றும், *(புறம். 209:13-14)*

*"முற்றிய திருவின் மூவர் ஆயினும்*
*பெட்பின்று ஈதல் யாம் வேண்டலமே" (புறம்.205:1-2)*

என்று கூறப்படும் அடிகளால் அறநெறியில் நின்று அருளோடு புலவர்களின் வாழ்த்தும் மனப்பான்மையை அறியலாம்.

## அறநெறி தவறாமை

புலவர்கள் பரிசில் வாழ்க்கையை மேற்கொண்டாலும் தகுதியில்லாத மன்னர்களைப் புகழ்ந்து பாடுவது இல்லை. அவர்கள் தரும் பரிசினையும் ஏற்றுக்கொள்வதில்லை. பெருமையில்லாத மன்னருடைய பாராட்டினை விரும்பி அவர் செய்யாதனவற்றைக் கூறிப் பாராட்டுதல் தன் சிறுநாவிற்கு இயல்பன்று என்று கண்டீரக்கோப் பெருநள்ளியைப் பாடும் வன்பரணர் கூறுகிறார். பரிசிலுக்காக மன்னர்கள் செய்யாத எதையும் புலவர்கள் புகழ்வதில்லை என்பதை,

*"பீடில் மன்னர்ப் புகழ்ச்சி வேண்டிச்*
*செய்யா கூறிக் கிளத்தல்*
*எய்யாதாகின்றேம் எம் சிறு செந்நாவே"(புறம்.148:5-7)*

என்ற அடிகளால் அறியலாம்.

புலவர்கள் மன்னர்களின் குடிப்பெருமை அறிந்தே பாடினார்கள். மன்னர்கள் ஏதாவது சிறுமை புரிந்தால் அவன் வழிதோன்றல்களைப் புலவர்கள் பாடுவதில்லை. பெண்கொலை புரிந்த நன்னனின் மரபில் வந்தவரைப் புலவர்கள் பாடவில்லை.

## மன்னர்களுக்கு அறமுரைத்த திறம்

மன்னர்களின் பரிசில்களில் புலவர்கள் வாழ்ந்தாலும் அவர்கள் தவறு செய்த போது புலவர்கள் வாளாஇருக்கவில்லை. மாறாக இடித்துரைத்தனர். வள்ளல் காரியின் குழந்தைகளைப் பகை காரணமாக யானைக்காலில் இட்டுக் கொல்லச் சொன்ன சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைக் கண்ட கோவூர்கிழார் அவனுடைய



முன்னோர்களின் இயல்பை எடுத்துக்கூறி அத்திய செயலைத் தடுத்தார். இதை,

*"நீயே புறவின் அல்லல் அன்றியும் பிறவும்*
*இடுக்கண் பலவும் தீர்த்தோன் மருகனை*
*இவரே புலனுழு துண்மார் புன்கண் அஞ்சித்*
*தமது பாத்துண்ணும் தண்ணிழல் வாழ்நர்*
*களிறு கண்டு அழுஉம் அழாஅல் மறந்த*
*புன்தலைச் சிறார்*
*கேட்டனை ஆயின் நீ வேட்டது செய்ம்மே" (புறம். 46)*

என்று கூறி அவன் உள்ளத்தில் அருளுணர்வினைத் தோற்றுவித்து அக்குழந்தைகளைக் காப்பாற்றினார். மேலும், இளந்தத்தன் என்னும் புலவனை ஒற்றன் என்று ஐயுற்ற நெடுங்கிள்ளி அவனைக் கொல்லத் துணிந்தான், அப்போதும் கோவூர்கிழார் தான் உண்மையை எடுத்து சொல்லிக் காப்பாற்றினார் என்பதை புறநானூற்றுப் பாடல் 47-யில் 1-7 அடிகள் எடுத்துரைக்கின்றன. தீதும் எதுவும் இல்லாத புலவர்கள் தங்கள் வாழ்வில் மன்னரைப் புகழ்வதோடு மட்டுமல்லாமல் தவறு செய்த போது மன்னர்களை அறவழியில் செலுத்துவதற்காகக் கடிந்துரைக்கவும் செய்திருக்கின்றனர்.

மன்னனை நம்பியே உலகம் வாழ்வதால் மன்னர்கள் தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்ய வேண்டும். நாடாளும் மன்னர்கள் தங்கள் கடமைகளைச் செய்ய புலவர்கள் உறுதுணையாக இருந்துள்ளனர். நன்மை, தீமைகளை எடுத்துரைத்து மன்னனை அறவழியில் நடக்குமாறு தூண்டியிருக்கின்றனர். மன்னர்கள் தவறாக நடந்த போதும் தங்கள் கடமைகளை மறந்த போதும் அறநெறிகளை எடுத்துக்கூறி அரசியலில் சிறந்தவர்களாக அவர்கள் விளங்க புலவர்களே காணரமாக அமைந்தனர்.

சோழன் நலங்கிள்ளிக்குப் பல்வேறு அறிவுரைகளைக் கூறிய முதுகண்ணன் சாத்தனார் என்னும் புலவர் சிறப்பில்லாத குருடும், வடிவற்ற தசைப்பிண்டமும், கூனும், ஊமையும், செவிடும், விலங்கு வடிவிலான தோற்றமும் ஆகிய எட்டுக் குறைபாடுகள் கொண்ட மக்கட் பிறவிகள் உள்ளன. இவை பேதைத் தன்மையிலான பிறப்புக்கள் ஆகும். இவற்றால் யாதொரு பயனும் இல்லை. அதே போல் இரப்போர் வராத செல்வமும் பயனற்றது. ஆகையால் மன்னன் செல்வம் அறம், பொருள், இன்பம் ஆகியவற்றை வளர்க்க வேண்டும் இல்லையென்றால் உன்னை நீ பாதுகாக்காதவன் ஆகிவிடுவாய் என்கிறார். இதை,

*"அறனும் பொருளும் இன்பமும் மூன்றும்*
*ஆற்றும் பெரும நின் செல்வம்*
*ஆற்றாமை நின் போற்றாமையே" (புறம்.28: 15-17)*

என்ற அடிகளால் விளக்குகிறார். மன்னனின் செல்வத்தைப் பயனுள்ள வகையில் செலவு செய்யுமாறு அறிவுறுத்துகிறார் புலவர்.

கருவூரை வென்று மேம்பட்ட புகழை அடைந்தவன் ஒள்வாள் கோப்பெருஞ்சேரல் இரும்பொறை என்ற மன்னன். இம்மன்னனை அருளுடனும், அன்புடனும் குடிமக்களைக் காக்குமாறு கூறுகிறார் புலவர். குழந்தையைப் பாதுகாப்பது போல் எச்சரிக்கையுடன் நாட்டைப் பாதுகாக்க வேண்டும் என்று அறமுரைக்கிறார். இதை,

***"அருளும் அன்பும் நீக்கி நீங்கா***
***நிரயம் கொள்பவரோடு ஒன்றாது காவல்***
***குழவி கொள்பவரின் ஓம்புமதி***
***அளிதோ தானே அது பெறலருங்குரைத்தே"*** *(புறம்.5)*

என்ற புறநானூற்று பாடல் அடிகளால் அருளும், அன்பும் இல்லாதவரோடு சேராமல் நாட்டை நன்முறையில் காக்க வேண்டும் என்னும் அறத்தையே வலியுறுத்துகிறது. நாட்டை மேன்மேலும் வளப்படுத்துவது அரசனின் கடமைகளுள் முதன்மையானதாகும். அதனால் அறத்தின் வழி நின்று அருளோடும் இருப்பதே சிறந்தது என்று கூறுகின்றனர்.

புலவர்கள் மன்னர்களின புறவாழ்வில் மட்டுமல்லாமல் அகவாழ்வையும் நெறிப்படுத்தும் தன்மையுடையவர்களாக இருந்துள்ளனர். மன்னர் நெறிமாறிச் சென்ற இடத்துப் புலவர்கள் அவனை இடித்துரைத்து நன்னெறிப்படுத்தினர். பரிசில் பெறுவது மட்டுமே நோக்கமாகக் கொள்ளாமல் பொதுநலம் சார்ந்து மன்னனது அகவாழ்விலும் நெறிப்படுத்திய தன்மை அக்காலப் புலவர்களிடையே இருந்துள்ளது. மிகச் சிறந்த கொடை வள்ளலாகக் கருதப்பட்ட பேகன் தன் தனிப்பட்ட வாழ்வில் மனைவியை மதித்து வாழவில்லை. அவளைப் பிரிந்தே வாழ்ந்தான். இதைக் கண்டிக்கும் விதமாக கபிலர் "பேகனே! உன் மனைவியான கண்ணகிக்கு அருள் செய்யாவிட்டால் அவள் இறப்பாள். அதனால் உனக்குப் பழி ஏற்படும். ஆதலால் அவளை அழைத்து வருவாயாக" என்று அறிவுறுத்திய செய்தி புறநானூறுப் பாடல் 145யில் இடம் பெற்றுள்ளன.

ஆளுவோர் ஆட்சி செம்மையாக நடைபெறப் புலவர்கள் பல்வேறு அறிவுரைகளைப் புகன்றனர். போரில் வென்ற மன்னர்களைப் பாராட்டினார்கள். எனினும் முறையற்ற போரை விலக்குவதற்குப் பெரிதும் விழைந்தனர். கோப்பெருஞ்சோழன் தன் மக்கள் மேல் படை எடுத்துச் சென்றபோது புல்லாற்றூர் எயிற்றியனார் என்னும் புலவர் அவனைத் தடுத்து வடக்கிருக்கத் தூண்டினார் என்பதை புறநானூற்றுப்பாடல் 213 யில் 15-18 அடிகளில் மக்களோடு போர் செய்த மன்னனை வேண்டாம் என்று அறிவுறுத்தியதை அறியலாம்.

## நட்புணர்ச்சி

பல்துறையறிவும், பழுத்த அனுபவமும் கொண்ட புலவர்களிடம் காணப்பட்ட மற்றொரு சீரிய பண்பு நட்புணர்ச்சி ஆகும். புலவர்களும் அரசர்களும் நட்பாக இருந்ததோடு அல்லாமல் நட்பிற்கு இலக்கணமே வகுத்துக் கொடுத்துள்ளனர். அதியமான், ஔவை, பாரி, கபிலர்,



கோப்பெருஞ்சோழன், பிசிராந்தையார் போன்றவர்களின் நட்பு மிகச் சிறந்தாகும். அதன் காரணமாகவே மன்னர்கள் செய்யும் தவறுகளை அறத்தின் வழியில் நின்று அன்போடு சுட்டிக்காட்டி நல்வழிப்படுத்தி உள்ளனர் எனலாம்.

## முடிவுரை

புலவர்கள் மன்னர்களிடம் நாட்டின் உண்மை நிலையை எடுத்துக் கூறுகின்றவர்களாக - மன்னனுக்கு நன்மை தீமைகளை எடுத்துரைப்பவர்களாக இருந்திருக்கின்றனர். குடிகளின் நலன் நோக்கி மன்னன் வாழ, நாட்டின் வளம் நோக்கி மக்கள் வாழ, நாடும் மக்களும் வாழ புலவர்கள் நல்வழி காட்டியுள்ளனர். சங்கப் புலவர்கள் பொருட்செல்வத்தைப் பெரிதாகக் கருதாமல் நாட்டின் வளத்தையே பெரிதாகக் கருதினர். இத்தகைய தன்மையுடைய புலவர்கள் பல்வேறு அறங்களைப் பின்பற்றி அருளோடு வாழ்ந்தனர் என்பதை அறியமுடிகின்றது.